வைப்புத் தொகையில் செலுத்தாமல் வெகு நாட்களாக கையிருப்பில் வைத்திருந்தது. தொகை வழங்கப்படாமல் பின்னர் நீண்ட நாட்களுக்கு பின் வழங்கியது. இந்த ஆணையை எதிர்த்து திரு நடேசன் சென்னை உயர்நீதி மன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்தார். உயர்நீதி மன்றம் இந்த மனுவைத் தள்ளுபடி செய்துள்ளது. இதற்குப் பிறகு திரு. நடேசன் அவர்கள் பள்ளியின் தலைமை ஆசிரியர் பதவியை மட்டும் வகித்து வருகிறார். இவர்மீது வேறு கிரிமினல் வழக்குகள் தொடரப்பட்டதாகவோ அதன்மீது நீதிமன்றம் குற்றவாளியென தீர்ப்பளித்துள்ளதாகவோ இதுவரை தகவல் ஏதும் பெறப்படவில்லையென சங்ககிரி மாவட்ட கல்வி அலுவலர் கூறியுள்ளதாக பள்ளிக் கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

இந்தி வகுப்புகள்.

*535 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாட்டில் உயர்நிலைப்பள்ளிகளில் மாலைநேர இந்தி வகுப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளனவா?

(ஆ) ஆம் எனில், எங்கெங்கு ஏற்படுத்தப்பட்டுள்ளன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) நடப்புக் கல்வி ஆண்டில் உயர்நிலைப்பள்ளிகளில் பள்ளி நேரத்திற்குப் பின் இந்தி வகுப்புகள் ஏற்படுத்தப்படவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

*536 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

நமது மாநிலத்தில் மீண்டும் பள்ளிகளில் இந்தி வகுப்புகளை நடத்துவது குறித்து மத்திய அரசு நமது மாநில அரசுக்கு ஏதேனும் குறிப்பு அனுப்பியுள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தமிழ்நாட்டில் மீண்டும் உயர்நிலைப் பள்ளிகளில் பள்ளி நேரத்திற்குப் பின் மாலை நேர இந்தி வகுப்புகள் நடத்தும் திட்டத்திற்காக நடப்புக் கல்வி ஆண்டில் ரூ. 5 இலட்சம் மானியம் வழங்க ஒப்பளித்துள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS